# வாழ்வளிக்கும் தீவிரவாதியாக மாற சூளுரைப்போம்!



இன்று தீபாவளி! காலையில் விழித்து எழுந்தேன்.... கனவுகளை விழுங்கி, காலையில் எழுந்து ஜன்னல் வழியாகப் பார்த்த என் கண்ணுக்கு எட்டிய தூரத்தில் குழந்தை ஒன்று ஆகாயத்தில் மிதந்து கொண்டே புன்சிரிப்புடன் என்னை நோக்கி கைகளை நீட்டியது, கண்களைக் கசக்கிக் கொண்டு, இரவு கனவு இன்னும் தொடர்கிறதா என்று கவனமாகப் பார்த்தபோதுதான் தெரிந்தது அது குழந்தை அல்ல; குழந்தைக்கு நிகரான சிறு மரத்தின் கிளை ஒன்று தென்றலின் தீண்டலால் தளிர் இலைகளை அசைத்து ஆடியது, புன்முறுவல் பூத்த குழந்தை ஒன்று தன் கைகளைக் கூப்பி அழைப்பதுபோன்று தோன்றி இருக்கிறது.

தீபாவளி அன்று பசுமையான இலைகள் குழந்தை போல என்னை ஏன் அழைக்க வேண்டுமென யோசித்தபோது பலவிதமான எண்ணங்கள் என் மனதில் வந்தன. குழந்தை, பெற்றோர்கள் இணைவால் கருவாகி, பல மாதம் கருப்பையில் அன்னையின் உடலிலிருந்து உயிர் வளர்த்து, பின்பு பெற்றோர், குடும்பம், சமுதாயம் என அனைவரின் ஆதரவையும் பெற்று முழு மனிதனாக உருவெடுக்கிறது. அந்த உருமாற்றப் பாதையில் நம் வளர்ச்சிக்கு இயற்கையிலிருந்தும், பிற உயிரினங்களிலிருந்தும், செடி கொடிகளிலிருந்தும், சக மக்களிடமிருந்தும் பங்களிப்பைப் பெற்று உடல், மனம் வளர்க்கிறோம். அந்தப் பலனை, மேற்குறிப்பிட்ட அனைவருக்கும் திருப்பிக் கொடுக்கும் அடிப்படைக் கடமை ஒவ்வொருவருக்கும் இருக்கின்றது.

நாம் வாழ்வதற்கும், வளர்வதற்கும், செழிப்பதற்கும், பெற்றவற்றை அவரவருக்குத் திருப்பிக் கொடுத்தாக வேண்டும். பெற்றோரைப் பேணும் கடமை இங்கிருந்தே உருவாகிறது.

பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வாழ்நாளில் கரியமில வாயுவை, தான் உயிர் வாழ்தல் மற்றும் வளர்ச்சி செயல்களின்போது வெளியிடுவதும், தாவரங்களைப் பேணி, மரங்களை நட்டு அதைக் கட்டுப்படுத்துவதிலும் எந்த அளவுக்கு சமநிலையாக செயல்படுகின்றான் என்பது கேள்விக்குறி.

பண்டிகை நாட்களில் பட்டாசு வெடிக்கும்போது ஒவ்வொரு தனிப்பட்ட நபரும், தான் வெடிக்கும் பட்டாசுகளால் வெளிவரக் கூடிய மாசுப்படுத்தும் வாயுவை சரிக்கட்டும் வகையில் பல்லுயிர் பெருக்கத்திற்குப் பங்களிக்க வேண்டும். பட்டாசுகள் வெடிப்பதனால் வெளிப்படும் வாயுக்களின் அளவைக் குறிப்பிட்டும், ஒவ்வொரு கிலோ / லிட்டர் கரியமில வாயு (கார்பன்டைஆக்சைடு) மற்றும் பிற வாயுக்கள் அளவுக்கு எத்தனை கிலோ உயிர் எடை (Biomas) உருவாக்கப்பட வேண்டும் என்பதையும் குறிப்பிட்டு விற்பனை செய்தால் மேற்கண்ட சுற்றுப்புறச் சூழல் சமன்பாட்டைச் செயல்படுத்துவதற்கு சாதாரண மக்களுக்கு எளிதாக இருக்கும்.

பண்டிகை நாட்களில் ஒன்றுகூடுவதும், கேளிக்கை செய்வதும் மனிதனின் தனிப்பட்ட மற்றும் சமூகம் சார்ந்த வாழ்க்கைக்குத் தேவையானவை என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. அதே நேரத்தில் நம் வாழ்க்கையை இயற்கையுடன் சமன்படுத்துதலும் நிலையான அடிப்படை மனித கடமை என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும். தன் வாழ்க்கை மற்றும் செயல்கள் மூலமாக கரியமில வாயுவை வெளியிடுவதில் மட்டும் தன் வாழ்க்கையை நடத்தும் ஒவ்வொரு நபரும் சுற்றுப்புறச் சூழலுக்கு எதிரான குற்றங்களைச் செய்யும் குற்றவாளி மட்டுமல்ல! எதிர்கால தலைமுறைகளின் வாழ்க்கை அஸ்திவாரத்தை சிதைக்கும் பல்லுயிர்களைக் கொல்லும் கொலைகார தீவிரவாதி என்றுதான் சொல்ல வேண்டும்.

எனவே, நாம் ஒவ்வொருவரும் நம் அடிப்படைக் கடமையானச் சுற்றுப்புறச் சூழலைக் காக்க எவ்வளவு தூரம் இயற்கையை நாம் பயன்படுத்துகிறோமே அதே அளவு திருப்பிக் கொடுக்க வேண்டும்.

இந்தத் தீபாவளி நன்னாளில் "வாழ்வு அழிக்கும் தீவிரவாதியாக இல்லாமல், வாழ்வு அளிக்கும் தீவிரவாதியாக" மாற நாம் சூளுரைக்க வேண்டும். பல்லுயிர் பேணுவோம்! மரங்களை நடுவோம்!.

**– வி. பாலகிருஷ்ணன் ஐ.பி.எஸ்.,**

**ஐ.ஜி., (நிர்வாகம்), தமிழ்நாடு காவல்துறை.**